

# பனிமயம்

செப்டம்பர் 2025

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே, நலந்தானா?

நம் தாயின் விழாவை சீரும் சிறப்புமாக கொண்டாடி முடித்திருக்கிறோம். ஆண்டவரின் அருள், அன்னையின் பரிந்துரை மற்றும் அன்பு மக்கள் உங்களின் உழைப்பு, ஒத்துழைப்பு, பங்களிப்புகள் தான் நாம் விழாவை சிறப்பாகக் கொண்டாடி முடித்ததற்கான காரணங்களாகும். தொடர்ந்து திருவிழா நாட்களில் கேட்ட மறையுரைகளின் சிந்தனைப்படி வாழ முயற்சி எடுப்போம். தாய் மரியின் பரிந்துரையும், பாதுகாவலும் நம்மோடிருப்பதாக.

புனித பிரான்சிஸ்கு சவேரியார் நம் பனிமயத் தாயின் சுரூபத்தை நமக்குத் தந்ததின் காரணமே நம் முன்னோர்கள் பெண் தெய்வங்களின் மீது கொண்டிருந்த பக்திதான். மாதா பக்தி வழியாக நம் முன்னோர்களை நெறிப்படுத்தினார், வழிநடத்தினார். இன்றும் மாதா பக்தி என்பது நம் மண்ணில் ஓங்கி நிற்கின்றது. கொடிப் பவனி நாளிலிருந்து ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி வரையிலும் நம் தாயைத் தேடி வந்த கிறிஸ்தவர்களின், பிற சமயத்து நண்பர்களின் கூட்டமே அதற்கு சாட்சி. விண்ணக மண்ணக அரசியான தாய் மரியாள் என்னும் பெண்ணைப் போற்றி மகிமைப்படுத்திய நாம் நம் குடும்பங்களில், சமூகங்களில் வாழும் பெண்களை எப்படி நடத்துகின்றோம், நடத்த வேண்டும் என்பதுதான் இம்மாத இதழின் மைய சிந்தனையாக அமைந்துள்ளது.

பெண்ணை தெய்வமாக பார்க்கக் கூடிய சமூகத்தில்தான் பெண்களுக்கு எதிரான பல கொடுமைகளும், வன்முறைகளும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பெண்மையை மையமாக வைத்து தாய்நாடு, தாய்மொழி, மாதா என்றெல்லாம் அழைத்தால் மட்டும் போதாது நம்மோடு குடும்பங்களில், திருச்சபையில், சமூகங்களில் வாழும் பெண்களை தெய்வங்களாக அல்ல சாதாரண மனிதர்களாகவாவது மதிக்கக் கற்றுக் கொள்வோம்.; அவர்களுக்குரிய உரிமையைக் கொடுப்போம். மாதாவையும் போற்றுவோம் பெண்மையையும் மதிப்போம்.

God Bless You All.



என்றும் பாசத்துடன்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை

உதயம் 27 தாரகை 1

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருள்பணி. ஸ்டார்வின்**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : **'பனிமயம்'**
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**அனைத்துப் படைப்புகளுடனான நமது உறவுக்காக...**

கடவுளால் நேசிக்கப் படுகின்ற, அன்புக்கும் கண்ணியத்திற்கும் தகுதியான, அனைத்து உயிரினங்களுடனான நமது பரிமாற்றச் சார்புத்தன்மையை, புனித பிரான்சிஸால் உந்தப் பட்டு அனுபவித்திட நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . 4
அருள்பணி. குமார்ராஜா

2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் . . . . . . . . 6
கலாபன் வாஸ்

3. தரிசனம் தருவாய் தாயே... . . . . . . . . . . . . . . . . 8
அருள்பணி. க.செ. பிரவீன் ராசு

4. தானா சேர்ந்த கூட்டம்! . . . . . . . . . . . . . . . . 10
முனைவர் சி. ஜாக்சன்

5. பெண்மையைப் போற்றுவோம் . . . . . . . . . . . . 12
ரோஸ் சேவியர்

6. ஆசிரியர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 14
ஜோ. ரெஜினா கிரகோரி

7. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 15

8. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . . . 18

# மரியன்னையின் திருப்பெயர்கள்

## 31 பாவிகளுக்கு அடைக்கலம்!



மரியன்னையின் மன்றாட்டு மாலையில் வரும் "பாவிகளுக்கு அடைக்கலமே" என்னும் பெயர் தனித்துவமானது மட்டுமல்ல, சில இறையியலாளருக்கு நெருடலைத் தரும் பெயரும்கூட. இறைவன் மட்டும்தானே பாவிகளுக்கு அடைக்கலம். அந்தப் பெயரில் எப்படி மரியாவை அழைக்கலாம் என அவர்கள் நினைக்கலாம்.

உண்மையில் கடவுள்தான் பாவிகளுக்கு அடைக்கலம் என்கிறது மறைநூல். "ஆண்டவரின் வாக்கு நம்பத்தக்கது; அவரிடம் **அடைக்கலம்** புகும் அனைவர்க்கும் அவரே கேடயமாய் இருக்கின்றார்" (திபா 18:30) என்கிறார் திருப்பாடல் ஆசிரியர். ஆனாலும், மறைநூலை நன்கு அறிந்த திருமறைத் தந்தையர் அன்னை மரியாவைப் பாவிகளுக்கு அடைக்கலம் என்று துணிந்து அழைத்தனர். அதற்கு விவிலியக் காரணங்கள் இருக்கின்றன. தவறு செய்தவர்கள் தண்டனை அடைந்து விடாதபடி பாதுகாப்பு தரும் அடைக்கல நகர்கள் இருந்ததை பழைய ஏற்பாட்டில் காண்கிறோம். கடவுளின் கட்டளைப்படியே யோர்தான் ஆற்றின் இருபுறமும் ஆறு அடைக்கல நகர்கள் ஒதுக்கப்பட்டதை யோசுவா நூல் பதிவு செய்துள்ளது. "இஸ்ரயேலர் அனைவருக்கும் அவர்கள் நடுவில் வாழும் வேற்றினத்தாருக்கும் மேற்குறிப்பிட்டவை **அடைக்கல நகர்களாக** விளங்கின. அறியாமல் பிறரைக் கொன்ற எவரும் இரத்தப் பழி வாங்குபவரிடமிருந்து தப்புவதற்கு இவற்றில் அடைக்கலம் புகுவார். மக்களவை அவருக்குத் தீர்ப்பு வழங்கும் வரை அவர் கொல்லப்படுவதில்லை" (யோசு 20:9).

இந்தப் பின்னணியில்தான் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித ஜான் தமசீன் மரியாவைப் "பாவிகளுக்கு அடைக்கலம்" என அழைத்தார். நாம் பாவிகளாக இருந்தாலும், மரியா நமக்காகப் பரிந்து மன்றாடுகிறார். அவரது தாய்மையின் அடைக்கலத்தில் நுழைந்தவர்களை அவர் பாதுகாக்கிறார். எவ்வாறு ஆபிரகாம் சோதோம் நகரத்து மக்களை அழித்துவிட வேண்டாமென்று கடவுளிடம் பரிந்து மன்றாடினாரோ (தொநூ 18: 16-33), அதுபோல, அன்னைமரியாவும் நமக்காக இறைவனிடம் பரிந்து மன்றாடுகிறார்.

இதே கருத்தைப் புனித பொனவெந்தூரும் (கி.பி. 1221-1274) போதித்துள்ளார். "உலகமே வெறுத்து ஒதுக்கும் ஒரு பாவியைக்கூட, மரியா அன்புடன் அரவணைக்கிறார். தம் நடுவராம் கடவுளிடம் அவர் ஒப்புரவாகும் வரை மரியாவின் அரவணைப்பு நிற்பதில்லை" என்கிறார் அவர். இன்று வரையிலும் "பாவிகளுக்கு அடைக்கலமே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்னும் மன்றாட்டு எண்ணற்ற இறைமக்களின் கூக்குரலாக ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. ★

# புலம் பெயர்ந்தோரின் ஆறுதல்!

32



மரியன்னையின் மன்றாட்டு மாலையில் "புலம் பெயர்ந்தோரின் ஆறுதல்" (Solace of Migrants) என்னும் திருப்பெயரைக் கவனித்திருக்கிறீர்களா? 2020ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் புதிதாக இணைத்த மூன்று பெயர்களுள் இதுவும் ஒன்று. மற்ற இரண்டும் "இரக்கத்தின் அன்னை" மற்றும் "எதிர்நோக்கின் அன்னை".

இரக்கம், எதிர்நோக்கு, புலம் பெயர்ந்தோருக்கான அக்கறை மூன்றுமே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தனித்துவமான ஈர்ப்புகள் என்பது நாம் அறிந்ததே. அவர் பொறுப்பேற்ற உடனே "இரக்கத்தின் ஆண்டை" அறிவித்தார். 2025 யூபிலி ஆண்டு "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" என்பதை மையக் கருத்தாகக் கொண்டிருக்கிறது.

பரிவின் திருத்தந்தை எனஅழைக்கப்படும் பிரான்சிஸ் பணிக் காலத்தின் தொடக்கத்தில் இருந்தே புலம் பெயர்ந்தோர்க்காகக் குரல் கொடுத்து வந்தார். 2015ஆம் ஆண்டு அமெரிக்கப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய முதல் திருத்தந்தை என்னும் பெருமையோடு அவர் பேசியபோது புலம் பெயர்ந்தவர்களுக்கு அமெரிக்கா ஆதரவு தரவேண்டும் என்று வலியுறுத்தினார். போர்களாலும் வேலையின்மையாலும் கீழைநாடுகளிலிருந்து ஐரோப்பாவை நோக்கிப் படையெடுத்த எண்ணற்ற அகதிகளை ஐரோப்பா ஏற்க மறுத்தபோது, அதனைப் பாவம் என்று கண்டித்தார். இவற்றோடு இன்னொன்றையும் செய்து உலகை அதிர வைத்தார் பிரான்சிஸ். 2016ஆம் ஆண்டு கிரீஸ் நாட்டுக்குத் திருப்பயணமாகச் சென்றபோது அங்குள்ள லெஸ்போஸ் தீவில் அடைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான புலம் பெயர்தோரைச் சந்தித்துப் பேசினார். அதன் நிறைவாகத் தாம் உரோமை திரும்பியபோது 12 அகதிகளைத் தமது விமானத்திலேயே அழைத்துக்கொண்டு வந்தபோது உலகமே வியந்தது.

விவிலியம் புலம் பெயர்ந்தோருக்கு ஆதரவாகப் பேசுகிறது. முதுபெருந் தந்தை ஆபிரகாம், எகிப்தின் யோசேப்பு, ஏன் மரியாவும், இயேசுவும் கூட புலம் பெயர்ந்தவர்களாகத்தான் உலா வருகிறார்கள். அகதிகளாகத் திரிந்த இஸ்ரயேலர்மீது இரங்கி, கடவுள் அவர்களுக்குப் புதியதொரு நாட்டைத் தந்தார். விடுதலை பெற்ற பிறகு அவர்களும் பிற அகதிகள் மேல் அக்கறை காட்ட வேண்டுமென அழைத்தார். "தேமா நாட்டில் குடியிருப்போரே! தாகமுற்றோர்க்குத் தண்ணீர் கொண்டு வாருங்கள்; அகதிகளை உணவுடன் சென்று சந்தியுங்கள்" (எசா 21:14) என்றார் இறைவாக்கினர்.

அன்னை மரியா ஆதரவற்றோரின் புகலிடம் என்பது காலம் காலமாக நிலவி வரும் நம்பிக்கை. எனவேதான், "அந்நியராய் இருக்கும் நாங்கள் ஏவையின் மக்கள்" என்று மன்றாடுகிறோம். திருத்தந்தை பிரான்சிஸ் இறைமக்களின் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தி மன்றாட்டு மாலையில் அதனை இணைத்துள்ளார்.



அருள்பணி. குமார்ராஜா

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

## திருஅவையில் பொதுநிலையினர்

### பொதுநிலையினர்



“பொதுநிலையினர் என்னும் சொல், திருப்பணி நிலையினரும் திருச்சபையின் இசைவு பெற்ற நிலையினரும் நீங்கலாக ஏனைய கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டோர் எல்லாரையும் குறிக்கும். இவர்கள் திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவோடு ஒருடலாக்கப் பெற்று, இறைமக்களாக உருப் பெறுகின்றனர். தங்களுக்கே உரித்தான முறையில் கிறிஸ்துவின் கற்பிக்கும், வழிநடத்தும், புனிதப் படுத்தும் பணிகளில் பங்குகொள்கின்றனர். திருச்சபையில் கிறிஸ்தவர் அனைவரும் ஆற்ற வேண்டிய வகையிலே தங்களுக்குரிய பங்கை உலகிலே ஆற்றிவருகின்றனர்.

“உலகைச் சார்ந்திருக்கும் பண்பு பொது நிலையினருக்கு உரியதும், தனிப்பட்ட விதத்தில் அவர்களைச் சார்ந்ததும் ஆகும். ........உலகு சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட்டு உழைக்குங்கால், அவற்றைக் கடவுளின் திட்டப்படி நெறிப்படுத்துவதின் மூலம் கடவுளின் ஆட்சியை அமைக்கத் தேடுவது தங்களின் தனிப்பட்ட அழைப்பால் பொதுநிலையினைச் சார்ந்தது. இவ்வுலகில் அதாவது பல்வேறான உலக அலுவல்கள், வேலைகள், சாதாரண குடும்ப, சமூக வாழ்க்கை நிலைகள் ஆகியவற்றின் நடுவில் அவர்கள் வாழ்கின்றனர். இவற்றோடு அவர்களது வாழ்வு, ஒருவாறு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. இங்குதான் கடவுளின் அழைப்பை அவர்கள் எதிர்கொள்கின்றனர். நற்செய்தி மனப்பான்மையால் வழிநடத்தப்பெற்றுத் தங்களுக்குரிய அலுவலை ஆற்றுவதன் மூலம் அவர்கள் புளிப்பு மாவு போல உலகிலிருந்து கொண்டே உலகைத் தூய்மைப் படுத்த அழைக்கப்பட்டுள்ளனர்.....” (திருச்சபை எண் - 31).

### பொதுநிலையினரின் மேன்மை

“தேர்ந்துகொள்ளப்பட்ட இறைமக்கள் குலம் ஒன்றே; ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கு ஒன்றே” (எபே 4:5). கிறிஸ்துவில் அடைந்த மறுபிறப்பினால் பிறக்கும் மாண்பு அதன் உறுப்பினர் யாவருக்கும் பொதுவானதே; பிள்ளைகளுக்குரிய அருளின் நிறைவை அடைய அவர்கள் பெற்றுள்ள அழைப்பும் பொதுவானதே; ஒரே நிறைவாழ்வு, ஒரே எதிர்நோக்கு, மற்றும் பிளவுபடா இறையன்பு அவர்களுக்கு உரியது... எனவே, கிறிஸ்துவிலும் திருச்சபையிலும் இனம், நாடு, சமூக நிலைமை, பால் என்பனவற்றின் அடிப்படையிலே எவ்வித ஏற்றத் தாழ்வும் இல்லை.



“திருச்சபையிலே அனைவரும் ஒரே வழியில் நடந்து செல்லாவிடினும் இதில் தூய்மை நிலையடைய யாவரும் அழைக்கப்பெறுகின்றனர். கிறிஸ்துவின் திருவுளப்படி சிலர் போதகர்களாகவும், அருளடையாளங்களை வழங்குபவர் களாகவும், அருள்பணியாளர்களாகவும் பிறருக்காக நியமிக்கப்பெற்று இருக்கின்றனர். இருப்பினும் மேன்மையிலும், கிறிஸ்துவின் உடலை வளர்ச்சியுறச் செய்ய நம்பிக்கை கொண்டோர் அனைவருக்கும் பொதுவாயுள்ள பணியிலும் யாவரும் உண்மையிலேயே சமமான பங்கு பெறுகின்றனர். ஏனெனில், திருப்பணியாளர்களுக்கும் ஏனைய இறைமக்களுக்கும் இடையே ஆண்டவர் ஏற்படுத்திய வேறுபாடு ஒரு பிணைப்பையும் கொண்டுள்ளது. அதாவது, அருள்பணியாளர் களும் நம்பிக்கை கொண்டோரும் பொதுவான தேவையினால் ஒருவரோடு ஒருவர் இணைக்கப் பெற்று இருக்கின்றனர். கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றித் திருச்சபையின் அருள்பணியாளர் ஒருவரொருவருக்கும் நம்பிக்கை கொண்ட பிறருக்கும் பணிபுரிய வேண்டும். நம்பிக்கை கொண்டோரும் ஆர்வமுடன் திருப் பணியாளர்களோடும் போதகர்களோடும் ஒத்துழைத்து உதவ வேண்டும். இவ்வாறு தங்களிடையேயுள்ள பணி வேறுபாட்டில் கிறிஸ்துவின் உடலிலுள்ள வியத்தகு ஒற்றுமைக்கு அனைவரும் சான்று பகர்கின்றனர்” (திருச்சபை எண் : 32).

## பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி

“பொதுநிலையினர் கடவுளின் மக்களாக இணைக்கப் பெற்று கிறிஸ்துவின் ஒரே உடலில் ஒரே தலையின்கீழ் அமைக்கப் பெற்றுள்ளனர். அவர்கள் யாராயிருப்பினும் சரி, உயிருள்ள உறுப்பினர்களாக, படைத்தவரின் கொடையினாலும் மீட்பரின் அருளினாலும் தங்கள் முழு ஆற்றலுடன் திருச்சபைக்கு வளர்ச்சியளிக்கவும், தொடர்ந்து அதைத் தூய்மைப்படுத்தவும் பாடுபடும்படி அழைக்கப் பெறுகின்றனர்.

“திருச்சபையின் நிறைவாழ்வுப் பணியில் பங்கு பெறுவதே பொதுநிலையினரின் திருத்தூதுப் பணியாகும். இந்தத் திருத்தூதுப் பணியை ஆற்றவதற்கே திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் ஆகியவற்றின் மூலம் அனைவரும் ஆண்டவரால் அதிகாரப் பூர்வமாக அனுப்பப் பெற்றிருக்கின்றனர்.

எந்தெந்த இடங்களில் பொது நிலையினரால் மட்டுமே திருச்சபை மண்ணுலகிற்கு உப்பாகத் திகழ முடியுமோ, அந்தந்த இடங்களிலும் சூழ்நிலைகளிலும் திருச்சபையை உடனிருக்கச் செய்து செயலாற்றுவதாய் ஆக்கவே அவர்கள் தனிப்பட்ட முறையிலே அழைக்கப் பெற்றிருக்கின்றனர். இவ்வாறு தங்களுக்கு வழங்கப் பெற்ற கொடைகளின் மூலம் எல்லாப் பொதுநிலையினரும்

“கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப” (எபே 4:7) திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியின் சாட்சிகளாகவும், அதே நேரத்தில் அதன் உயிருள்ள கருவிகளாகவும் இருக்கின்றனர்.

கடவுளின் நிறைவாழ்வுத் திட்டம் எல்லாக் காலங்களிலும் இடங்களிலும் வாழும் மக்கள் அனைவரையும் மேன்மேலும் தழுவும்படியாகப் பணிபுரிய வேண்டிய தலையாய கடமை பொதுநிலையினர் அனைவருக்கும் உண்டு. அதன் மூலம் அவர்களின் ஆற்றலுக்கும் காலங்களின் தேவைகளுக்கும் ஏற்பத் திருச்சபையின் மீட்பு அலுவலிலே ஆர்வமுடன் பங்குபெற அவர்களுக்கு எல்லா வழிவகைகளும் அளிக்கப்பட வேண்டும்” (திருச்சபை எண் : 33).

தொகுத்தளிப்பவர் : **கலாபன் வாஸ்**

# தரிசனம் தருவாய் தாயே...

## மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர் 2



***இதுவரை...***

அன்னை மரியா பல்வேறு இடங்களில் பல்வேறு மனிதர்களுக்குத் தரும் காட்சிகள் பற்றிய அறிமுகத்தைக் கடந்த இதழில் பார்த்தோம்.

***இனி...***

வத்திக்கான தலைமைப் பீட ஒப்புதலைப் பெற்ற காட்சிகள் எவை? அவற்றோடு சேர்த்து மரியன்னையின் மற்ற காட்சிகளின் வரலாறு என்ன? இக்காட்சிகள் நமக்குத் தரும் பாடங்கள் என்ன? என்பதையெல்லாம் இத்தொடரில் நாம் விரிவாகக் காணலாம்.

அவையானவன:

1. குவாதலூப்பே மாதா காட்சி, மெக்சிகோ (1531)
2. லாசலேத் மாதா காட்சி, பிரான்ஸ் (1846)
3. தங்க இதய மாதா காட்சி, பெல்ஜியம் (1932)
4. க்னாக் மாதா காட்சி, அயர்லாந்து (1879)
5. பாத்திமா மாதா காட்சி, போர்ச்சுக்கல் (1917)
6. லூர்து மாதா காட்சி, பிரான்ஸ் (1858)
7. ஏழைகளின் கன்னி மாதா காட்சி, பெல்ஜியம் (1933)
8. மகிழ்ச்சியான சந்திப்புகளின் மாதா காட்சி, பிரான்ஸ் (1664 – 1718)
9. அற்புதப் பதக்க மாதா காட்சி, பிரான்ஸ் (1830)
10. எதிர்நோக்கின் மாதா காட்சி, பிரான்ஸ் (1871)
11. கிறிஸ்தவர்களின் சகாய மாதா காட்சி, செக் குடியரசு (1866)
12. கியத்ரஸ்வால்ட் மாதா காட்சி, போலந்து (1877)
13. லெசாஜஸ்க் மாதா காட்சி, போலந்து (1578)
14. சிலுவா மாதா காட்சி, லித்துவானியா (1608 1612)
15. சீயோன் மாதா காட்சி, இத்தாலி (1842)
16. வார்த்தையின் மாதா காட்சி, ருவான்டா (1981 1989)

இவை தவிர, தலைமைப்பீட ஒப்புதல் பெறாத, அதேவேளையில் தலஆயரின் ஒப்புதலைப் பெற்ற, மக்களுக்கு நன்கு அறிமுகமான சில காட்சிகளும் உள்ளன. வேளாங்கண்ணி, மெட்சுகோரியே போன்ற காட்சிகள் இத்தகையவையே.

17. நல்ல உதவி மாதா காட்சி, அமெரிக்கா (1859)
18. வெற்றியின் மாதா காட்சி, எகுவாதோர் (1594 1634)
19. நிலையான உதவியின் மாதா காட்சி, பிரான்ஸ் (1652)
20. மொந்தக்னாகா மாதா காட்சி, இத்தாலி (1729 1730)
21. துயரங்களின் மாதா காட்சி, இத்தாலி (1888 1890)
22. ஒப்புரவாளர் மாதா காட்சி, வெனிசுலா (1976 1990)
23. அகிதா மாதா காட்சி, ஜப்பான் (1973)
24. குவாப்பா மாதா காட்சி, நிகரகுவா (1980)
25. செபமாலை மாதா காட்சி, அர்ஜென்டினா (1983)



எவ்வித ஒப்புதலும் தேவைப்படாத, பாரம்பரியமாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காட்சிகளும் உள்ளன. எஸ்கலின் பனிமய மாதா காட்சி, திருத்தூதர் யாக்கோபுக்குத் தரப்பட்ட தூண் மாதா காட்சி போன்றவை இதில் அடங்கும்.

பொதுவாக, ஒரு காட்சி திருஅவையின் ஒப்புதலைப் பெற மூன்று படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன. முதலில், காட்சிகளின் உண்மைத்தன்மை தல ஆயரால் ஆய்வு செய்யப்படுகின்றது. கிறிஸ்துவின் போதனைகளுக்கோ, விவிலியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உண்மைகளுக்கோ, மீட்பின் மறையுண்மைகளுக்கோ, திருஅவையின் நம்பிக்கைக்கோ முரணாக இருப்பவை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. காட்சி கண்டதாகச் சொல்லும் மனிதர்கள் வேறு ஏதாவது குறுகிய இலாப நோக்கங் களுக்காக இவ்வாறு சொல்கின்றார்களா, அல்லது உண்மையிலேயே காட்சி கண்டுள்ளார்களா என்பதும் ஆய்வு செய்யப்படுகின்றது. இரண்டாவதாக, காட்சிகளின் உண்மைத்தன்மை ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், திருஅவை காட்சி நடைபெற்ற இடத்தில் பொதுவான திருவழிபாடுகளைக் கொண்டாடுவதற்கும், பக்திமுயற்சிகளைச் செய்வதற்கும் அனுமதி வழங்குகின்றது. இறுதியாக, இக்காட்சி உண்மையானது என்பது பற்றியும், காட்சி இறைமக்களுக்குத் தரும் போதனைகளைப் பற்றியும் திருஅவையின் அதிகாரிகளால் சான்று வழங்கப்படுகின்றது.

திரிதெந்துப் பொதுச்சங்கக் காலம் முதலே, இத்தகைய காட்சிகளை ஆய்வுசெய்து ஒப்புதல் அளிக்கும் பொறுப்பு முதன்முதலில் அந்த இடத்தின் தலஆயருக்கே உரியது. ஏதாவதொரு காரணத்தால், தலஆயரால் அப்பொறுப்பை நிறைவேற்ற இயலாத சூழல் ஏற்பட்டால் மட்டுமே வத்திக்கான் அப்பொறுப்பை முன்னின்று செய்யும். இவ்வாறு தலஆயரோ, அல்லது வத்திக்கான் தலைமைப்பீடமோ ஒப்புதல் அளிக்கும் காட்சிகள் “வியப்புக்கும் பக்திக்கும் உரியவை” எனக் கருதப்படுகின்றன. எப்படி இருந்தாலும், இத்தகைய மரியன்னை காட்சிகள் நமக்கு உணர்த்தும் செய்தி விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகும், தன் பிள்ளைகளுக்கான மரியன்னையின் பணி தொடர்கின்றது என்பதே. தம் மகனோடு மண்ணக மக்களை இணைக்கும் கருவியாகவே மரியன்னை இக்காட்சிகளைப் பயன்படுத்துகின்றாரே தவிர, வெறுமனே ஒருசில மனிதர்களின் அல்லது இடங்களின் பெருமைக்காகவோ, தன் புகழுக்காகவோ இக்காட்சிகளை வழங்குவதில்லை என்பது திரு அவையின் நம்பிக்கை. ஆற்றல்மிக்க பரிந்துரையாளராக இருக்கும் அந்த அன்புத்தாய் தன் மகனின் வழியில் தம் மக்களை வழிநடத்த இன்றும் கருத்தாயிருக்கின்றார் என்பதும், கானாவூர்த் திருமண வீட்டில் பணியாளர்களை இயேசுவிடம் அழைத்துச் சென்ற அதே தாய், இன்றும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களை இறைமகனை நோக்கி வழிநடத்துகின்றார் என்பதும் எவ்வளவு வியப்பான உண்மை.

இத்தகைய வியப்புக்குரிய மரியன்னை காட்சிகளையும், இக்காட்சிகள் வழியாக நம் அன்பு அன்னை நமக்குத் தரும் செய்திகளையும் பற்றி தொடர்ந்து கலந்துரையாடுவோம், வாருங்கள்.

*தொடரும்....*



அருள்பணி. க.செ. பிரவீன் ராசு





# தானா சேர்ந்த கூட்டம்!

ஆகஸ்ட் மாதம் வந்துவிட்டாலே தூத்துக்குடி மக்கள் கொண்டாட்ட மனநிலைக்கு வந்துவிடுவார்கள். மதம், இனம், மொழி கடந்து ஒரு தாயின் பிள்ளைகளாய் தங்களது பனிமயத் தாயின் திருவிழாவுக்கு கூடும் மக்களை காணும்போது, மனது ஒருவிதமான பரவச நிலையை அடைந்துவிடும். எல்லோரும் இணைந்து அன்னையின் திருவுருவத்தை நோக்கி ஜெபங்களை ஏறெடுப்பதை பார்க்கையில் அலைகடல் கரையைக் கடந்து அன்னையின் பாதத்தில் அமர்ந்திருப்பதைப்போல மக்கள் வெள்ளம் இருப்பதாக தோன்றும்.

இப்படி நாம் பரிசுத்த பனிமய அன்னையை காலங்கள் தாண்டி நேசிக்க என்ன காரணம்? என்று யோசித்தால் அன்னை மரியாவின் மீது இருக்கின்ற நம்பிக்கை என்னும் பதில் தோன்றும். அன்னை மரியா மாதிரி நமக்கு நம்பிக்கையை கற்றுத் தரும் தாயை எங்கு காண முடியும்?....



ஒரு சிற்றூரில் வாழ்ந்த பார்வையற்றவன் "ஒளி என்று ஒன்று கிடையவே கிடையாது" என்று எல்லோரிடமும் வாதிட்டு வந்தான். அவனிடம் ஊரார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். அவர்கள் கூறுவதை அவன் ஏற்க மறுத்தான். "ஒளி என்று ஒன்று இருப்பதாக நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்: அப்படியொன்று இருந்தால் என்னிடம் கொண்டு வாருங்கள்: அதை நான் தொட்டுப் பார்க்கிறேன். இல்லையென்றால் சுவைத்துப் பார்க்கிறேன்: இல்லையென்றால் முகர்ந்துப் பார்க்கிறேன். இவையெல்லாம் இல்லையென்றால் பரவாயில்லை; அதிலிருந்து ஒலி எழுப்புங்கள்; அதையாவது கேட்டுப்பார்க்கிறேன்" என்று கூறிவந்தான்.

ஒளியைத் தொட்டுப் பார்க்கமுடியாது: சுவைக்க முடியாது; முகர முடியாது; ஏன் அதிலிருந்து ஒலியை எழுப்பமுடியாது என்று யாராவது சொன்னால் - எனது உடல் உறுப்புகளால் ஒன்றை அறிய முடியவில்லை என்றால் அப்படி ஒரு பொருள் இல்லை என்றுதான் அர்த்தம் என்று அவன் வாதம் செய்தான். ஒளியைக் கண்ணால்தான் காண முடியும். உனக்கு கண்கள் இல்லை என்று கூட சொல்லிப் பார்த்தார்கள். அவன் அதையும் ஏற்க மறுத்தான். "கண் என்று ஒன்றே இல்லை. நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்" என்றான். தன் ஊர்க்காரர்களை முட்டாள்கள், அறிவிலிகள்,



மூட நம்பிக்கைக்காரர்கள் என்றெல்லாம் எள்ளி நகையாடினான்.

ஒருமுறை ஞானி ஒருவர் அந்த ஊர் வழியாக பயணம் செய்ய நேர்ந்தது. அந்த ஊர்க்காரர்கள் அந்த 'பார்வையற்றவனை' அவரிடம் அழைத்துக்கொண்டு வந்து நீங்களாவது இவனுக்கு ஒளி இருப்பதை நிரூபியுங்கள் என்று சொன்னார்கள். "ஒளி உண்டு என்று நான் சொன்னாலும் இவன் நம்பப் போவதில்லை. இவனுக்கு அதை நிரூபித்துக்காட்டவும் முடியாது. இவனுக்கு இப்போதைக்குத் தேவை பார்வை; பார்வை இருந்தால் ஒளியைப் பற்றி இவன் அனுபவப்பூர்வமாக அறிந்துகொள்வான். எனக்குத் தெரிந்த ஒரு மருத்துவர் இருக்கிறார். அவரிடம் இவனைக் கொண்டு செல்லுங்கள். அவர் இவனுக்குப் பார்வைக் கொடுப்பார்" என்றார்.

அவர்கள் அவனை அந்த மருத்துவரிடம் அழைத்துச்சென்றார்கள். ஆறு மாத கால சிகிச்சைக்குப் பிறகு அவனுக்குப் பார்வை வந்து விட்டது. அவன் அந்த ஞானியை தேடிச்சென்றான். அவர் காலில் விழுந்து வணங்கினான். "ஒளியை உங்களால் அறிந்துகொண்டேன்: உங்களுக்கு எப்படி நான் நன்றி சொல்வதென்று தெரியவில்லை" என்று கண்ணீர் வடித்தான்.

அந்த ஞானியோ "நீ எனக்கு நன்றி சொல்ல வேண்டியதில்லை; ஒளியை உனக்குக் காட்டியது நானல்ல: உன் கண்" என்றார்.

நமது பனிமய அன்னை உலகின் ஒளியாக வந்த கடவுளை நாம் காணும் கண்களாய் இருக்கிறார். அவரிடம் நாம் அடைக்கலம் தேடி வரும்போது அக இருள் அகன்று, நம்பிக்கை ஒளி முன்னே தெரிகிறது. அவர் வழியாக இயேசுவை பற்றிக்கொள்ள முடிகிறது. "சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்" என்று திருப்பாடல் 23:4இல் பார்க்கிறோம். அன்னை மரியாவின் வாழ்வில் இதை நம்மால் பொருத்திப் பார்க்க முடியும் .

1. தூய ஆவியால் கருவுற்ற நிலையில் மலை நாட்டிலுள்ள தனது உறவினரான எலிசபெத்தை காண இளம் வயதில் பயணம் செய்தபோது
2. இயேசுவை ஈன்ற சில நாள்களில் ஏரோது குழந்தையை கொல்ல தேடுகிறான் என வானதூதர் சொன்னதைக் கேட்டு நாடு விட்டு நாடு தப்பியோடும்போது
3. தனது அன்பான மகனை பன்னிரண்டு வயதில் காணாமல் தேடும்போது
4. கல்வாரி மலையில் சிலுவையினடியில் நின்றபோது

கடவுள் மீது முழுமையான நம்பிக்கை வைத்து வாழ்வின் எல்லா தருணங்களிலும் அதை எதிர்கொள்வதற்கான ஆற்றலைக் கடவுள் எனக்குத் தருகிறார் என்று வாழ்ந்ததால் விண்ணும் மண்ணும் அந்தத் தாயை வணங்கி நிற்கிறது.

ஒவ்வொரு முறை அவரைக் காணும் போதும் அந்த நம்பிக்கைக் கதிர்கள் நம் மீது படர்வதை நம்மால் உணர முடியும். "என் மீது நம்பிக்கை கொள்பவர் என்னைப் போல பல அரும் அடையாளங்களை செய்வார்" எனும் இறைவனின் வார்த்தை நமது பனிமய அன்னைக்கு மிகச் சரியாக பொருந்தும். அன்னையின் வழியில் நம்பிக்கையுடன் நடந்தால் இறைவனின் ஆசீர் என்றும் நம்மோடு.

பரிசுத்த பனிமயத் தாயே! உம்மைத் தேடி வரும் உம் பிள்ளைகள் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!



முனைவர் சி. ஜாக்சன்

# பெண்மையைப் போற்றுவோம்

## (அன்னை வேளாங்கண்ணி)



பெண்மை என்பது பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் உள்ளதாக வரையறுக்கப் படும் பண்புகள், நடத்தைகள், செயல்பாடு களின் தொகுப்பாகும். சமுதாயத்தை அன்பிலும், அறிவிலும், உறவிலும், வாழ்விலும் வளப்படுத்துபவள் பெண்.

“மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” - (கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை)

“பெண் என்றால் பேயும் இரங்கும் என்பர்.”

ஆனால் பெண்களைப் போதைப் பொருள்களாக, இகழ்ச்சிக்குரியவர்களாக கருதும் நிலை மாறவில்லை. ஆணும் பெண்ணும் சமம் என்று உணர்த்தவே கடவுளின் படைப்பு இருந்தது. (தொநூ 2:23) பாலினச் சமத்துவத்தைப் பொறுத்தே ஒரு நாட்டின் முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்படுகிறது.. நள்ளிரவில் நகைகளுடன் ஒரு பெண் வெளியில் சென்று, பத்திரமாகத் திரும்பினால், அன்றே நாம் சுதந்திரம் பெற்று விட்டோம் என்று பொருள் என்பது மகாத்மா காந்தியின் கூற்று.. நகைகள் இல்லாமலே சமூகப்பணி செய்யும் துறவு நிலையில் உள்ள சகோதரிகளும் வீண் பழிக்கு உள்ளாக்கப் படுகின்றனர்.

பெண் - மகளாகத் தோன்றி, ஒருவருக்கு மனைவியாக வாழ்ந்து, குழந்தைகளுக்கு தாயாகத் தொண்டு செய்து, தெய்வமாகக் காட்சித் தருகிறாள். பெண்மையில் தாய்மைக்கு இணை ஏதுமில்லை. எல்லாவற்றிலும் எல்லாரிடமும் அன்பு செலுத்துவதில் குறையில்லை. பெண்கள் கல்வியில் மட்டுமின்றி எல்லா துறைகளிலும் ஆண்களை மிஞ்சின திறமையிருந்தாலும், பல சமுதாய சிக்கல்களில் (பாலிய பலாத்காரம், வன்முறை) போதிய பாதுகாப்பு இல்லாத நிலை.

“Isha” என்றால் எபிரேயத்தில் பெண் என்று பொருள்படும். யூத மக்களிடையே பெண்கள் மதிக்கப்படுவதில்லை. அந்த சூழ்நிலையிலும் விவிலியத்தில் தெபோரா, இறைவாக்கினர், போர்வீரர், நீதித்தலைவர் (நீத 4:4)

இசையில் வல்லவர் மிரியாம் (விப 15:20). அரசி எஸ்தர் யூத இனத்தை காப்பாற்றுகிறாள் (எஸ் 2:17). ஆகார் என்ற அடிமை பெண், சாராள் பெண்ணுக்குப் பெண் எதிரி (தொநூ 21:10). அபிகாயில் தன் கணவனை தாவீது



அரசனின் கோபத்திலிருந்து காப்பாற்றுகிறாள் தெலீலா என்ற பெண் தன் கணவர் சிம்சோனை 1100 வெள்ளிக்காசுக்காகக் காட்டிக் கொடுக்கிறாள் (16:13). ஏரோதியாள் என்ற பெண் தன் மகள் வழியாக தன் பகையைத் தீர்த்து கொள்கிறாள். வெரோணிக்கம்மாள் இயேசுவின் திருமுகத்தைத் துடைத்து, மீட்பைப் பெற்ற வீரப் பெண்மணி. இவ்வாறு பலதரப்பட்ட பெண்களைக் காணலாம். இதைதான் "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்றார்களோ? மனதில் நல்லது விதைத்தால் வாழ்வு செழிக்கும். தீமையை விதைத்தால் அழிவு என்பதை உணர வேண்டும்.

"பெண்கள் தன்னடக்கத்தோடு நம்பிக்கை, அன்பு,தூய வாழ்வு ஆகியவற்றில் நிலைத்திருந்தால் தூய்மைப்பேற்றின் வழியாக மீட்புப் பெறுவார்கள்" (1திமொ 2:15).

உயிர்களை உருவாக்கி, அவர்களை நல்வழிப்படுத்தி, உலகில் மேன்மையுற செய்வதே பெண்ணுக்குரிய அறச்செயலாகக் கருதப்படுகிறது. தாய்மை அன்பின் உறைவிடம் தியாகத்தின் வடிவம் .இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் தாயின் வழியாக தரிசனம் தருகிறார். அன்பு, பாசம், பொறுமை, உதவும் ஆற்றல் ஒருங்கே பிணைந்த வடிவம். நம் தாய் எத்தனை வலிகளைத் தாங்கி நம்மை உருவாக்கி இருப்பாள். நம் கண்முன் உலாவரும் அன்னையரைப் போற்றி, அவர்கள் உயிரோடு உள்ளபோதே மகிழ்வோடு கவனித்துக் கொள்வோம். தாய்மைக்கு உதாரணம் அன்னை தெரசா.

"என்னுடைய எல்லா நல்ல குணங்களுக்கும் நான் என் தாய்க்கு கடன்பட்டவன்" - ஆபிரகாம் லிங்கன்.

"தாயின் காலடியில்தான் சொர்க்கம் இருக்கிறது." - நபிகள் நாயகம்.

"அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போருக்கு ஒப்பாவர்" (சீஞா 3:4)

கலப்படமில்லாத, நிறைவான அன்பையும் தன்னலமற்ற உணர்வையும் கொண்ட அன்னை மரியாள் சுவக்கீன்-அன்னா தம்பதியருக்கு தவப்புதல்வியாகப் பிறந்தார். தூய்மையிலும் ஞானத்திலும் அறிவிலும், இறைநம்பிக்கையிலும், தாழ்ச்சியிலும் சிறந்து விளங்கியதோடு, பிறருக்கு உதவிடும் ஆற்றல் உடையவராக விளங்கினார். கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இறைமகனை வயிற்றில் சுமந்து, பெற்றெடுத்து அவரை ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து வளர செய்தார் (லூக் 2:52). அவரும் சென்ற இடமெல்லாம் நன்மையே செய்து வந்தார்.

செப்டம்பர் 8ஆம் நாள் அன்னை மரியா பிறந்தநாளை கொண்டாடும் நாம், அன்னையை போன்று இறை நம்பிக்கை, தாழ்ச்சி, பணிவு, துன்பத்தை தாங்கும் துணிவுப் பெற்று "எல்லா தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக் 1:49) என்று பாடிய அன்னை மரியாளின் வாக்கும், இயேசுவின், "இறைவார்த்தையைக் கேட்டு அதை கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறு பெற்றோர்" என்ற வாக்கையும் நம் தலைமுறைகள் மனதில் பதிய வைத்து செயல்படுத்துவது தாய்மையின் கடமை.

பல புதுமைகளைக் காண செய்த அன்னை வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா திருவிழாவை கொண்டாடும் நாம், "எனக்கொரு தாய் இருக்கின்றாள்: என்றும் என்னை காக்கின்றாள்" என்ற மனநிறைவோடு பெண்மையைப் போற்றுவோம்!



ரோஸ் சேவியர்

# ஆசிரியர்



வாழும் வாழ்க்கை ஒருமுறைதான் - அதை
வாழ்ந்திட வழி சொல்லும் ஒருயிர்தான்
கல்விச் செல்வத்தை அள்ளித் தரும் - நம்
கண்கண்ட தெய்வம் ஆசிரியர்தான்

மாதா பிதா குரு தெய்வம் - அதில்
நாளும் கடவுளின் முன்நின்று
சுடர் விளக்காய் ஒளி தந்திடுவார்
சுயநலமில்லா மாமனிதர்

புவியினில் மாணவர் சிறந்திடவே
புது உலகை அவர் படைத்திடவே
தலைவர்கள் தரணியில் பெருகிடவே
தன்னறிவை நல்கும் பேரறிஞர்

தவறுகளை தினம் சுட்டி நின்றே
தடுத்திடுவார் பெரும் கேடுகளை
தன்னம்பிக்கை நம்மில் பதித்திடவே
தந்திடுவார் பெரும் பயிற்சிகளை

இறைவனின் கருணையை அறிய வைப்பார்
இனிய நல் பண்புகள் நம்மில் விதைப்பார்
நம் இல்லத்தில் ஆசிரியர் நம் பெற்றோரே
நம் பள்ளியில் பெற்றோர் நம் ஆசிரியரே

அன்னை தந்தைக்கு நாம் ஒரு பிள்ளை
அன்பான ஆசிரியருக்கு உலகெல்லாம் பிள்ளை
தினம் தினம் போதிப்பவர் ஆசிரியரே - அதை
தினசரி வாழ்பவர் தெய்வங்களே!



ஜோ. ரெஜினா கிரகோரி



# விவிலியப் போட்டி 125

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**சாலமோனின் ஞானம் அதிகாரம் 1 முதல் 5 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**ஓரிரு வார்த்தைகளில் விடை தருக.**

1. மனிதரை கடவுளிடமிருந்து பிரிப்பவை எவை?
2. ஆன்மாவை கொல்லுவது எது?
3. நூலின் இறுதி பகுதி எந்த இலக்கிய வகைக்கு எடுத்துக்காட்டு?
4. யாருடைய ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன?
5. இலக்கை நோக்கி நேராக பாய்வது எது?
6. மனித நேயம் உள்ள ஆவி எது?
7. மகப்பேறு இல்லாவிடினும் எது இருந்தால் சிறந்தது?
8. மண்ணுலகை பாழாக்குவது எது?
9. இறப்பு எதற்கு இல்லை ?
10. மனிதருக்கு உண்மையான நரை திரை எது?

## விவிலியப் போட்டி 124

**ஆகஸ்ட் 2025** *விடைக்குறிப்புகள்*

**எஸ்தர் (கிரேக்கம்)**
**அதிகாரம் 1 முதல் 10 வரை**

| | | |
|---|---|---|
| 1. | சரி | 4:1 |
| 2. | சரி | 1:15 |
| 3. | சரி | 4:17 |
| 4. | தவறு | 4:16 |
| 5. | சரி | 5:4 |
| 6. | சரி | 5:1 |
| 7. | சரி | 7:1 |
| 8. | சரி | 9:22 (அடிக்குறிப்பு) |
| 9. | சரி | 9:28 |
| 10. | சரி | 10:3d |

## விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.09.2025

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**63831 98510** (வாட்ஸ் அப் மட்டும்) அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.**

**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*

*சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 177*

**I.** *பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 102*

*விடை எழுதிய அன்பியங்கள் : 28*

*பரிசு பெறுபவர்கள் : 4*

1. தஸ்நேவிஸ் மாதா அன்பியம் **அஸ்கேனியஸ் அந்தோணிசாமி**
2. திவ்விய பாலன் அன்பியம் **பிரின்சி**
3. பாத்திமா மாதா அன்பியம் **ரீனா ராஜா**
4. இரக்கத்தின் மாதா அன்பியம் **பாப்டிஸ்டா**

## *பாராட்டுக்குரியவர்கள் : 98*

**அந்தோனியார் அன்பியம்**
5. சரோஜா
6. பிருந்தா
7. ஜெசி
8. ரீன ாமொறாயிஸ்

**அன்னை தெரசா**
9. ஜான்சி ராணி
10. ஜூலியட்ஸ் ரூபி

**அன்னை வேளாங்கன்னி**
11. டென்சி லோபோ
12. ஆரோன் ஷாரோன்
13. கவாஷினி ஆல்வின்

**கிறிஸ்து அரசர்**
14. செலஸ்கி கிளமென்ட்
15. ரெக்ஸ் கிரீன்வெல்
16. சாவியோ ஜூலியட்
17. லூரட் வசந்த்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
18. சுரேஷ் பிரேமா
19. சுகன் மோனிஷா

**திவ்விய பாலன் அன்பியம்**
20. சகாயராணி தனராஜ்
21. ஸ்டார்லக் ஏஞ்சலின்
22. சென்சிலா சகாயராஜ்

**பாத்திமா மாதா**
23. சுகந்தா ஸ்டெனி
24. பிச்சம்மாள்
25. அனு ஆல்வின்
26. ஸ்டெபி ரீகன்

**இரக்கத்தின் மாதா**
27. இருதயம்மாள் கொன்சால்
28. சகாயராணி
29. சேவியர் அம்மாள் கோமஸ்
30. செல்வி புரோ
31. பிரைட்டன் ஜெரோபின்
32. சித்ரா மோத்தா

**ஜெபமாலை மாதா**
33. கல்யாணி செல்வராஜ்
34. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**
35. டிரைபேனா
36. கிறிஸ்டோ ஜெபினா
37. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
38. சாந்தி ஆல்ட்ரின்
39. ஜோ ட்ரினிஷா
40. பிரிசில்லா
41. வெனிட்டாள்
42. ஜூலியஸ் தல்மேதா
43. எலிஜா இம்மானுவேல்
44. அல்பின்

**குழந்தை தெரசா**
45. பெர்லி டென்சன்
46. பெனி மொறாயிஸ்
47. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
48. பிரான்சிஸ் வாஸ்
49. மோனிகா செபஸ்டின்
50. எமல்டா

**மணல் மாதா**
51. ரொசாரி கோமஸ்
52. வெர்ஜினியா

**லூர்து மாதா**
53. சாண்டினா
54. ஆலிவர் வி. ராயன்
55. ஜெனோ சேவியர்
56. ரோஸலின் தாமஸ்
57. பிலோ கோமஸ்
58. ரஜூலா ஜான் போஸ்கோ

**மிக்கேல் அதிதூதர்**
59. ஜோஸ்பின்
60. ஷீபா

**பனிமய அன்பியம்**
61. சுரேஷ் ஆனி
62. ஜாக்குலின் வினோதினி
63. ராணி
64. ஜூடுரதி
65. அந்தோணி சாமி
66. சகாயராஜா சகாயராணி
67. மெர்ஸி

**பவுலடியார்**
68. லீமாரோஸ் ஜாய்
69. ராஜா ரோஸ்லின்
70. ஒபிலியா தாமஸ்
71. ஹெலினா

**பரிபூரண மாதா**
72. சப்னா கினிஸ்டன்
73. மெடோனோ

**பொம்பெய் மாதா**
74. இம்மாக்குலேட் சதீஷ்
75. டிஃபானி அண்டோ
76. லூடா கான்ஸ்டன்
77. அண்டோஎல்ஃபி
78. மேத்யூ கர்டோசா

**இராயப்பர்**
79. போஸ்கோ ரெனோ
80. டெய்ஸி
81. ரொமில்டா வெனான்சியுஸ்

**சவேரியார்**
82. ஜான்சி ஜெயக்குமார்
83. டெலிலாஅமலன்
84. அனுஷியா பீட்டர்
85. ஜோர்னல் ஜென்ஸி
86. வினிஸ்டா ஷெரின்

**செபஸ்தியார்**
87. பிரவீனா
88. ஜெஸிலா சேவியர்
89. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**
90. நேசம்
91. ஜூடி ஆரோக்கியராஜ்
92. டோனஸ் ராயன்

**சிறுமலர் அன்பியம்**
93. விஜி சகாயராஜ்
94. எல்சிட்டா ஆனந்தன்
95. விஜிலியா
96. செலஸ்டின்

**சூசையப்பர்**
97. கிறிஸ் ரீஜோ
98. ஹேமலதா
99. காஸ்பின் மோனிஷா
100. மென்சி

**திருச்சிலுவை**
101. ஜஸ்டின் ஸ்நோகுளோரி

**வியாகுல மாதா**
102. லூர்து லினட்

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 75

**பரிசு பெறுபவர்கள் : 4**

103. உவரி — **அர்லின் ஈவ்லின்**
104. ஆறுமுகநேரி — **ஜெயராணி**
105. லயன்ஸ் டவுண் சகாய மாதா — **சுகிர்தா**
106. யூதா ததேயு கோவில்

## பாராட்டுக்குரியவர்கள் : 71

**சென்னை**
107. ரெஜினா கிரகோரி
108. டெனிசா கிளாட்
109. பிரேமா குணசீலன்
110. மேமா ஸ்டீபன்
111. கமலஜோதி ஜெயசீலன்
112. ஆண்டனிகா ஷெர்லி

**கொடைக்கானல்**
113. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
114. ஜெஸிந்தா மேரி
115. சகோ. ஜான்ஸி மேரி

**திருச்சி**
116. ஜான்ஸி ராணி
117. மோனிட்டாகிறிஸ்டி
118. டோனி
119. மேத்யூ விவேக்

**ஆறுமுகநேரி**
120. தொம்மை அந்தோணி

ஆலந்தலை
121. தங்கராஜ் பொன்சேகா
122. சகாயராணி
123. மரியம்மாள்

**தருவைக்குளம்**
124. சோபியா
125. மைக்கேல் ஸ்டிபானி

**தேனி**
126. கரோலின் பிலவேந்திரன்
127. அடைக்கலமேரி சூர்யா அன்பு

**புதியம்புத்தூர்**
128. ஹெலன் அன்னமனி

**கடலூர்**
129. ஹென்றிதாஸ்

**கயத்தார்**
130. அமல்ராஜ்

**சிவகாசி**
131. ஜெர்லின்

**சங்கரன்கோவில்**
132. செல்வமேரி

**திண்டுக்கல்**
133. ரோசாலி

**பேட்டை**
134. ஹேலனிட்டா

**சூலூர்**
135. சத்யா சேவியர்

**புன்னைக்காயல்**
136. ஜோஸ்னா

### தூத்துக்குடி நகர பங்குகள்

**திரு இதயங்களின் பேராலயம்**
137. கிரேட்டா ராஜா
138. ரிமோல்டா
139. வெர்ஜினா ஜோஸ்பின் மேரி
140. ரமோலாகமிலஸ்
141. டீனுராய் ஜேசுபாலு
142. பீட்டர் ஜெயந்தி

**குருஸ்புரம்**
143. பிளாசி செல்வராஜன்
144. ஜான்சி மென்டிஸ்
145. ஆசிர்வாதம்
146. மாசில்லா
147. பௌவுசி ஜோ மைக்கேல்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
148. சகாயம்
149. டோமினிக்

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
150. செக்கரியா சாமுவேல்

**யூதா ததேயு கோவில்**
151. ஆரோக்கிய சர்மிளா
152. ஜூடி ரீத்தம்மாள் மேரி
153. ரோஸ் சேவியர்
154. ஜெனட் சேவியர்
155. லூர்து சுவிதா
156. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்
157. இம்மானுவேல் சேகர்

**அந்தோணியார் கோவில்**
158. மென்சிலா லொயோலா
159. டயானா வினோத்;
160. ரீடன்
161. இருதயம்மாள் கபிரியேல்
162. வயோலா ஜான்சன் காந்திநகர்
163. பின்டன் சோஃபியா
164. ரியாலினோ
165. சாந்தினி
166. பேபிவால்டர்

**பாத்திமா நகர்**
167. ஷர்மிளா ரமேஷ்
168. மேரி ஹேம்லின்

**சார்லஸ் கோவில்**
169. சகாயிட்டா மச்சாது
170. அல்போன்சா பர்னாண்டோ

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
171. சகோ. மரிய சூசை ரூபி
172. சகோ. ரூபெல்லா மேரி

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
173. வெர்ஜின்
174. தயாபரராணி

**திரேஸ்புரம்**
175. கோல்வின் ஜேசுராஜ்
176. ஸ்நோ வெண்பா
177. கிருபா



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 215**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 177**





# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 15)

## செப்டம்பர் - 2025

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்பணி. ஸ்டார்வின்** |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி. பிரவீன் ராசு** |
| களப் பணியாளர் | : | **சகோ. மிக்கேல் அருள்ராஜ்** |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | ஞாயிற்றுக் கிழமைகளில் |
|---|---|---|
| காலை 5.30, 6.30<br>மாலை 5.30 | காலை 5.30, 6.30 — திருப்பலி<br>காலை 11.00 — செபமாலை, **நவநாள் திருப்பலி**<br>மாலை 5.30 — திருப்பலி<br>மாலை 6.30 — செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | காலை **5.00, 6.30, 8.00** — திருப்பலி<br>காலை **9.30** — ஆங்கிலத் திருப்பலி<br>மாலை **5.30** — திருப்பலி<br>மாலை **6.30** — செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

*மற்ற நாள்களில் எந்நேரமும் பங்குத்தந்தையரை அணுகலாம்.*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*

- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.*

# பனிமயச் சுவடுகள்

## (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

1. பரிசுத்த பனிமயத் தாயின் **443ஆம் ஆண்டுப் பெருவிழாக் கொடியேற்றம்** 26.07.2025 அன்று காலையில் **மேதகு ஆயர் ஸ்டீபன்** அவர்களால் நடைபெற்றது. தமிழக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறைக் கண்காணிப்பாளர், மாநகர மேயர் ஆகியோர் கொடியேற்றத் திருநிகழ்வில் பங்கேற்றனர்.

2. 31.07.2025 வியாழக்கிழமை அன்று **புனித லொயோலோ இஞ்ஞாசியாரின் திருவிழா**, நம் பங்கில் பணியாற்றும் சவேரியானா, இயேசு சபைத் தந்தையருக்கு சிறப்பு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

3. **திவ்விய நற்கருணைப் பவனி** 03.08.2025 ஞாயிறு அன்று மாலை 06.15 மணிக்கு நடைபெற்றது. தொடர்ந்து, ரோச் வளாகத்தில் நடைபெற்ற திவ்விய நற்கருணை ஆசீரில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர்.

4. பரிசுத்த பனிமயத் தாயின் பெருவிழாவின் போது, 04.08.2025 திங்கள் அன்று மாலை **கர்தினால் அந்தோனி பூலா** சிறப்பு ஆங்கிலத் திருப்பலி நிறைவேற்றினார்கள். மாலை ஆராதனை இரவிலும், பெருவிழாத் திருப்பலி கள் 05.08.2025 செவ்வாய் அன்றும் நடைபெற்றன. மேதகு ஆயர்கள் ஸ்டீபன், இவோன் அம்புரோஸ் திருப்பலிகளுக்குத் தலைமையேற்றனர். இரவில் சப்பரப் பவனி நடைபெற்றது. இவை அனைத்திலும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

5. 13.08.2025 புதன்கிழமை அன்று **புனித அடைக்கல அன்னையின் திருவிழா**. நம் பேராலயப் பங்கில் புனித அடைக்கல அன்னையின் பிரான்சிஸ்கன் சபைச் சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

6. 15.08.2025 வெள்ளிக் கிழமை அன்று **அன்னை மரியாவின் விண்ணேற்ப்புப் பெருவிழா** பேராலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கடன்திருநாளாகிய அன்று நான்கு திருப்பலிகள் நமது பேராலயத்தில் நடைபெற்றன.

7. **இந்திய நாட்டின் 79ஆவது விடுதலை நாள் விழா** 15.08.2025 அன்று பங்கில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இரண்டாம் திருப்பலியின் நிறைவில் தேசியக் கொடி, கொடிமரக் கம்பத்தில் ஏற்றப்பட்டது.



# பங்கில் நிகழ்ந்தவை



*வரவேற்கிறோம்*

## 1. திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 38. | இன்பென்ட் ஜோ:ஃபில் | அமல்தாஸ் - ஸ்டெபி | 10.08.2025 | அன்னை வேளாங்கன்னி |
| 39. | மரிய ஜோசான்டோ | நிக்ஸன் - டோமா பிரிசில்லா | 17.08.2025 | காவல்தூதர் |



*வாழ்த்துகின்றோம்*

## 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 51. | அட்லினா ரீட்டா | ரீகன் - அனிட்டா | 03.08.2025 | தஸ்நேவிஸ் மாதா |
| 52. | ஜேக்லிப் | ஜெகதீஷ் - சிவகாமி | 03.08.2025 | காவல்தூதர் |
| 53. | டிஃப்னிகா | ஜெகதீஷ் - சிவகாமி | 03.08.2025 | காவல்தூதர் |
| 54. | சியாரா | ஜெகதீஷ் - சிவகாமி | 03.08.2025 | காவல்தூதர் |
| 55. | கிறிஸ் ஜோயல் | ராஜேஷ் - சிந்தியா | 03.08.2025 | மணல் மாதா |
| 56. | கேத்ரின் | ரொனால்டு ரீகன் - டான்சி | 03.08.2025 | மிக்கேல் அதிதூதர் |
| 29. | திபூர்சிய ஜெரின் | ரொனால்டு ரீகன் - டான்சி | 03.08.2025 | மிக்கேல் அதிதூதர் |
| 30. | மரிய சம்பூரண அபிஷா | ராஜ் குமார் - செல்வி | 03.08.2025 | சவேரியார் |
| 31. | ஸ்னோ பியார்சன் | விமல்சன் - பிஸ்மிலா | 03.08.2025 | சவேரியார் |
| 32. | ரெக்ஸ் டிஜோ | மார்ட்டின் - மெஜோரா | 03.08.2025 | திருச்சிலுவை |



*ஆசி கூறுகின்றோம்*

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 40. | அஸ்வின் ஜூடு - நிவேதா பர்னாந்து | திவ்யபாலன் | 28.08.2025 |
| 41. | பிரியந்த் கொரைறா - அன்டனி இம்மாகுலேட் | மணல் மாதா | 31.08.2025 |



*செபிக்கின்றோம்*

## 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 49. | ராஜா | அக்சீலியா | 18.08.2025 | செபஸ்தியார் |



## நடைபெறவிருப்பவை

★ 05.09.2025 தலைவெள்ளிக்கிழமை அன்று காலையும், மாலையும் நோயாளர்கள், **முதியோருக்கு இல்லங்களில் திவ்விய நற்கருணை** வழங்கப்படும்.

★ 06.09.2025 மாதத்தின் முதல் சனியன்று மாலைத் திருப்பலியும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

★ நமது பிள்ளைகளுக்கு ஆங்கில அறிவை, சரளமாய் பேசும் திறமையை அதிகரிக்க Spoken English வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒன்பதாம் வகுப்பு முதல் கல்லூரி வரை படிக்கும் பெண் பிள்ளைகளுக்கு வின்செண்ட் தே பவுல் சபையின் பொறுப்பில் ஓசானாம் கணினி பயிற்சி மையத்திலும், ஆண் பிள்ளைகளுக்கு உதவிப் பங்குத்தந்தையின் பொறுப்பில் அந்தோனியார் அரங்கத்திலும் பயிற்சி கொடுக்கப்படும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் **அன்பு உணவு** வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி நடைபெறும்.

| எண். | நாள் | செய்தித் தலைப்பு |
|---|---|---|
| 53. | 16.09.2025 | துன்பம் தாங்கும்; அன்பு |
| 54. | 23.09.2025 | நன்மையே செய்யும் அன்பு |
| 55. | 30.09.2025 | அநீதியை எதிர்க்கும் அன்பு |

திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் நுணுக்கமான புதுப்பிப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் செப்டம்பர் மாதம் இரண்டாம் வாரம் வரை நற்செய்தி வழிபாடு நடைபெறாது.

**செப்டம்பர் 14** ஞாயிற்றுக்கிழமை அன்று **திருச்சிலுவை மகிமைப் பெருவிழா** நம் திருச்சிலுவைநாதர் சிற்றாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

❖ **12.09.2025** வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு **திருக்கொடியேற்றம்** நடைபெறும்.

❖ **13.09.2025** சனிக்கிழமை மாலை 05.30 மணி பேராலயத்தில் திருப்பலி நடைபெறும். மாலை 06.30 மணிக்கு திருச்சிலுவைநாதர் சிற்றாலயத்தில் **மாலை ஆராதனை** நடைபெறும்.

❖ **14.09.2025** ஞாயிற்றுக்கிழமை காலை 05.00 மணிக்கு திருப்பலி பேராலய வளாக சிலுவை குருசடியில் நடைபெறும். மாலை 05.30 மணிக்கு **திருவிழாத் திருப்பலி** திருச்சிலுவை சிற்றாலயத்தில் நடைபெறும். இத்திருநிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்கேற்று இறையருள் பெறுவோம்!

## விண்ணக வாழ்வின்

# 26ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

கண்டேன் என் உயிர்க்கு உயிரான அன்பர்களை.
அவரை சிக்கென பிடித்தேன். விடவே இல்லை. (இபா 3.4)

# A. பியோ ராயன் பர்னாந்து



என் அன்பு மகனே!
காலத்தின் கட்டாயம்
பிரிந்துவிட்டாய்
உன் இனிமையான புன்னகை
என் இதயத்தில் என்றென்றும் பதிந்துவிட்டது!
விழி நிறைந்து நிற்கிறேன்
உன்னை மறக்க முடியாமல்!

பிறப்பு
10.12.1978

இறப்பு
11.09.1999

உன் நினைவுகளோடு...

அம்மா : ராஜேஸ்வரி
மற்றும் குடும்பத்தினர்

# இரண்டாம் ஆண்டு நினைவு நாள்

பயப்படாதே உன்னை மீட்டுக்கொண்டேன்.
உன்னை பேர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன்

# S. அலங்காரம் பர்னாந்து



பிரிவால் துயருறும்

மனைவி : ராஜேஸ்வரி
மற்றும் குடும்பத்தினர்

பிறப்பு
05.08.1937

இறப்பு
16.01.2023

# விண்ணக வாழ்வின்

# 60ஆம் நாள் நினைவஞ்சலி

*நீர் தேர்ந்தெடுத்து உம் அருகில் வைத்துக்கொள்ளும் மனிதர் பேறுபெற்றோர்*

*(திபா 65:4)*



**மண்ணில்**
**09.01.1945**

**விண்ணில்**
**27.06.2025**

## அருள்தந்தை

# G. ஆஸ்வால்ட் பர்னாந்து

**வயது : 80**

**பிரிவால் வருந்தும்**

**அருள்தந்தை ஜோ OMI**

**அருள்தந்தை வெலிங்டன், சே.ச.**

**மற்றும்**

**N. கஸ்பார் அந்தோணியம்மாள்**

**குடும்பத்தினர்**

# 5th Year of Remembrance

*"Those who are righteous will be long remembered"*

**Born On Earth**
**29.12.1952**



**Born in Heaven**
**08.09.2020**

## N. THOMAS JUDIX FERNANDEZ

*May be you died 5 years ago*
*But your memory will forever live*
*in our hearts and*
*in the hearts of those*
*who know you.*

**Deeply Mourned By**

| | | |
|---|---|---|
| Wife | : | **LUCIA SORIS** |
| Son | : | **J. GORGHY FERNANDEZ** |
| Daughter in Law | : | **N. MOFISHA FONSEKA** |
| Grand Daughter | : | **G. MARIAA MICHELLE** |

*along with Friends & Family*

Selaiyur, Chennai - 600073. PH:9940470826

"நேர்மையாளருக்கு மீட்பு
ஆண்டவரிடமிருந்து வருகின்றது" *(திபா 37:39)*

**6ஆம் ஆண்டு நினைவு**

**Born**
**21.07.1950**



**Died**
**06.09.2019**

## T. WILLINGTON

**100ஆம் ஆண்டு பிறந்த நாள்**

**14ஆம் ஆண்டு நினைவு**





## S. THOMMAI ANTONY FDO

Born : 1926
Died : 11.07.2008

## M. BASALIAMMAL CARDOZA

Born : 1928
Died : 20.05.2011

பிரிவால் துயருறும்

**தம்பிகள், தங்கைகள்**
**மற்றும் குடும்பத்தினர்**

*"Jesus replied, I assure you that today you will be with me in paradise"*

*Luke 23:43*

## 4th Death Anniversary

# P.R. REZANTH RODRIGO



**Born**
**05.04.1984**

**Heaven**
**23.09.2021**

*In Loving memory*

Wife : **ELGIN**
Daughters : **SHAIRLY RODRIGO**
**HAZEL RODRIGO**

## 3rd Death Anniversary

# C. PUSHPA RAJAN RODRIGO



**Born**
**03.10.1957**

**Heaven**
**29.09.2022**

*In Loving memory*

Wife : **CRAMLIN RODRIGO**
Son : **SAHAYA REYON RODRIGO**
Daughter : **RUBINI RODRIGO**

# விண்ணக வாழ்வின்
# முதல் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
03.09.1980

மறைவு
08.09.2024

## M. செல்வகுமார்

நீ எம்மை விட்டுப் பிரிந்தாலும் உன் நினைவுகள்
எங்கள் இதயத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும்.
நீ எங்கள் கண்களுக்கு மறைந்தாலும், உன் ஆன்மா
எங்களோடு எப்போதும் இருக்கும்.
உன் இழப்பு எங்களால் தாங்க முடியாத துக்கமாக இருந்தாலும்
உன் நினைவுகள் எங்களுக்கு ஒரு பொக்கிஷம்.
மரணத்தால் ஒரு வாழ்க்கை முடிவதில்லை.
நினைவுகளால் அது என்றென்றும் வாழ்கிறது.
உன் புன்னகையும், உன் பேச்சும், எங்கள்
நினைவுகளில் நீங்காமல் இருக்கும்.

**உன் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.**

**நினைவுத் திருப்பலி**

08.09.2025 திங்கள்கிழமை
காலை 06.30 மணிக்கு
பரிசுத்த பனிமய அன்னை
திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி.

**பிரிவால் வருந்தும்**

அன்பு தாய் : இருதய மேரி
சகோதரிகள், மக்கள், மருமக்கள் மற்றும்
உற்றார் உறவினர்கள்

2, சன் பீட்டர் குருசடி சந்து, தூத்துக்குடி.

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி!

"நீதியுள்ள ஆண்டவர்தம் திருமுகத்தை நேர்மையாளர்கள் காண்பர்"
(திபா 11:7)



மண்ணில்
08.07.1919
விண்ணில்
22.09.2005

மண்ணில்
15.11.1926
விண்ணில்
30.04.2018

## இ. பி. ராயர் இசபெல் கர்டோசா

கண் முன்னே நீங்கள் வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் நிழலாடும்
மண்விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கி சென்றாலும் - மனக்
கண் விட்டு மறையாமல்
காலமெல்லாம் இருப்பீர்கள்!

இறைவா, என்றும் எம் அன்பு பெற்றோர்
உம் திருநிழலில் பேரின்பம் காண இறைஞ்சுகின்றோம்.

நீங்கா நினைவில்

மக்கள், மருமக்கள், பேத்திகள், பேரன்கள்,
பூட்டிகள், பூட்டன்கள்

SHINY Ph : 98421 31493